உ
சிவமயம்

# அப்பர் பெருமானது குருபூசை தினத்தினையும் குருகுலம் அறக்கட்டளையின் ஆண்டு நிறைவினையும் முன்னிட்டு நடாத்தும் சைவத்திருமுறை மனனப் போட்டி – 2024

**போட்டி விதி முறைகள்**

- போட்டி நான்கு பிரிவாக நடைபெறும்.
    - பிரிவு 01 – தரம் 3 மற்றும் தரம் 4 உள்ளடங்கும்.
    - பிரிவு 02 – தரம் 5 மற்றும் தரம் 6 உள்ளடங்கும்.
    - பிரிவு 03 – தரம் 7 மற்றும் தரம் 8 உள்ளடங்கும்.
    - பிரிவு 04 – தரம் 9, தரம் 10 மற்றும் தரம் 11 உள்ளடங்கும்.
- ஒரு அறநெறிப் பாடசாலையில் இருந்து ஒரு பிரிவிற்கு இரண்டு போட்டியாளர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பத்தினை 24.04.2024ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.
  (பாடசாலை மட்டத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டு தெரிவு செய்து அனுப்புவது மாணவர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்குவதாக அமையும்.)
  அனுப்ப வேண்டிய முகவரி **பணிப்பாளர், குருகுலம் அறக்கட்டளை, ஸ்ரீ ஆதி மாணிக்கப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை வீதி, பாரதிபுரம், ஐயங்கேணி, செங்கலடி.**
- போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் அறநெறிச் சீருடையில் அல்லது பொருத்தமான சைவத் தமிழ் பண்பாட்டு உடையுடன் வருகை தர வேண்டும்.
- போட்டி நடைபெறும் தினத்தில் குறித்த நேரத்திற்கு வருகை தராதவிடத்து வேறு நேரம் வழங்கப்படமாட்டாது.
- போட்டிக்கு வருகை தரும் மாணவர்களது பொறுப்பாசிரியர் ஒருவர் கட்டாயம் வருகை தர வேண்டும்.
- போட்டியாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பதிகங்களை மனனம் செய்து வருதல் வேண்டும்.
- மாணவர்ளுக்கான இறுதிப் போட்டி **05.05.2024** அன்று ஸ்ரீ ஆதி மாணிக்கப்பிள்ளையார் அறநெறி பாடசாலை கட்டடமான **“சத்தியபாமா” மண்டபத்தில் காலை 8.30** மணிக்கு ஆரம்பமாகும்.
- போட்டிகள் யாவும் நிறைவுற்றவுடன் பி.ப 2.31 மணிக்கு ஆரம்பமாகும் ஆண்டு விழா நிகழ்வின் போது போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டு வெற்றியீட்டிய மாணவர்கள் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## பரிசில் விபரம்

| | |
|---|---|
| **பிரிவு - 01** | |
| 1 | 2000 பெறுமதியானது |
| 2 | 1500 பெறுமதியானது |
| 3 | 1000 பெறுமதியானது |
| **பிரிவு - 02** | |
| 1 | 3000 பெறுமதியானது |
| 2 | 2000 பெறுமதியானது |
| 3 | 1500 பெறுமதியானது |

| | |
|---|---|
| **பிரிவு - 03** | |
| 1 | 4000 பெறுமதியானது |
| 2 | 3000 பெறுமதியானது |
| 3 | 2000 பெறுமதியானது |
| **பிரிவு - 04** | |
| 1 | 4500 பெறுமதியானது |
| 2 | 3500 பெறுமதியானது |
| 3 | 2500 பெறுமதியானது |

- மூன்று பிரிவுகளில் முதலிடம் அல்லது இரண்டாம் இடங்களை ஒரே அறநெறிப்படசாலை பெற்றுக்கொள்ளுமானால் அவ் அறநெறிப்பாடசாலைக்கு 5000 ரூபாவிற்கு குறையாத இசைக்கருவி ஒன்று வழங்கப்படும்.
- போட்டியில் கலந்துகொள்ள வருகை தருகின்ற மாணவர்களுக்கும் அவர்களினை அழைத்து வருகின்ற ஆசிரியர்களுக்குமான மதிய போசனம் வழங்கப்படும்.

# போட்டி உள்ளடக்கம்

1. பிரிவு 01 – தரம் 3 மற்றும் தரம் 4 – **நமச்சிவாய திருப்பதிகம்**
**“சொற்றுணை வேதியன் சோதி வானவன்” – “மாப்பிணை தழுவிய மாதொர்…” வரை உள்ள 10 பாடல்கள்.**
2. பிரிவு 02 – தரம் 5 மற்றும் தரம் 6 – **“மாசில் வீணையும்…” முதல் “விறகிற்றீயினன் பாலிற் படுநெய்போல்…” வரை வரை உள்ள 10 பாடல்கள்.**
3. பிரிவு 03 – தரம் 7 மற்றும் தரம் 8 – **“கூற்றாயினவாறு விலக்ககலீர்…” முதல் “போர்த்தாயங்கோ ரானையின் ஈருரித்தோல்…” வரை உள்ள 10 பாடல்கள்.**
4. பிரிவு 04 – தரம் 9, தரம் 10 மற்றும் தரம் 11 – **போற்றித் திருத்தாண்டகம்**
**“வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி…” முதல் “உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி…” வரை வரை உள்ள 11 பாடல்கள்.**

**புள்ளித் திட்டம்**

- முழுமையான மனனம் - 30 புள்ளிகள்
- பிழையின்மையும் உச்சரிப்பும் - 25 புள்ளிகள்
- வாய்மொழி வினாக்கள் - 25 புள்ளிகள்
- பண், தாளம் மற்றும் பக்தி - 20 புள்ளிகள்

“திருநாவுக்கரசருக்கு மங்களம்”

.
இப்படிக்கு

……………………

அறப்பணியில்

பணிப்பாளர்
குருகுலம் அறக்கட்டளை
ஸ்ரீ ஆதிமாணிக்கப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை,
பாரதிபுரம், ஐயங்கேணி, செங்கலடி

உ
சிவமயம்

# அப்பர் பெருமானது குருபூசை தினத்தினையும் குருகுலம் அறக்கட்டளையின் ஆண்டு நிறைவினையும் முன்னிட்டு நடாத்தும் சைவத்திருமுறை மனனப் போட்டி – 2024

## விண்ணப்பப்படிவம்

1. அறநெறிப்பாடசாலையின் பெயர்:…………………………………………………………
2. பதிவு இலக்கம்:……………………………..
3. பொறுப்பாசிரியர் பெயர்:………………………………………………
4. தொலைபேசி இல:…………………………………

| இல | மாணவர் முழுப்பெயர் | தரம் | கையொப்பம் |
|---|---|---|---|
| பிரிவு - 01 | | | |
| 1 | | | |
| 2 | | | |
| பிரிவு - 02 | | | |
| 1 | | | |
| 2 | | | |
| பிரிவு - 03 | | | |
| 1 | | | |
| 2 | | | |
| பிரிவு - 04 | | | |
| 1 | | | |
| 2 | | | |
| | | | |
| வருகை தருகின்ற ஆசிரியர் விபரம் | | | |
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

…………………….
பொறுப்பாசிரியர்

**நமச்சிவாயத் திருப்பதிகம்**
திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

இடுக்கண்பட் டிருக்கினும் இரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளின் நாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை யாறங்கந்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன் நாடொறு நல்கு வான்நலன்
குலமில ராகிலுங் குலத்திற் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.
-திருச்சிற்றம்பலம்-

உ
சிவமயம்

**போற்றி திருத்தாண்டகம்**

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி யங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

இமையா துயிரா திருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழியே ழான ஒருவா போற்றி
அமையா அருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 9

நெடிய விசும்போடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியும் இகலி போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்ற முதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் றன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11
..திருச்சிற்றம்பலம்...

உ
சிவமயம்

**திருவதிகை வீரட்டானப் பதிகம்**

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
   கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
   பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
   குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன்அதி கைக்கெடில
   வீரட்டா னத்துறை அம்மானே.   1

நெஞ்சம்முமக் கேயிட மாகவைத்தேன்
   நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
   வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
   நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென் னீர்அதி கைக்கெடில
   வீரட்டா னத்துறை அம்மானே.   2

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
   படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றாற்
   சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
   பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீரடி கேள்அதி கைக்கெடில
   வீரட்டா னத்துறை அம்மானே.   3

முன்னம்மடி யேன்அறி யாமையினான்
   முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன்
   சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
   தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யார்அதி கைக்கெடில
   வீரட்டா னத்துறை அம்மானே.   4

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையாற்
   கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
   நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
   வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லார்அதி கைக்கெடில
   வீரட்டா னத்துறை அம்மானே.   5

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
   தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
   உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
   உடலுள் ளுறுசூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
   வீரட்டா னத்துறை அம்மானே.   6

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவலி லாமையினால்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின கம்படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னாத்துறை அம்மானே. 7

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்று மிலாமையினாற்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேனடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 8

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மை இனித்தெளியார்
அடியார்படு வதிது வேயாகில்
அன்பேஅமை யும்மதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 9

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண் டும்விழுந் தும்மெழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

இத்தலம் நடு நாட்டிலுள்ளது.
சுவாமி : வீரட்டானேஸ்வரர்' அம்பாள் : திரிபுரசுந்தரி.
இப்பதிகம் சூலை நோய் தீர ஓதியருளியது. 10

உ
சிவமயம்

**திருச்சிற்றம்பலம்**

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. 1

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 2

ஆளா காராளா னாரை அடைந்துய்யார்
மீளா வாட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளா தசுரை யோதொழும் பர்செவி
வாளா மாய்ந்துமண் ணாகிக் கழிவரே. 3

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே. 4

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி அலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே. 5

குறிக ளுமடை யாளமுங் கோயிலும்
நெறிக ளுமவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே. 6

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே. 7

எழுது பாவைநல் லார்திறம் விட்டுநான்
தொழுது போற்றிநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்
டுழுத சால்வழி யேயுழு வான்பொருட்
டிழுதை நெஞ்சமி தென்படு கின்றதே. 8

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப ரவர்தம்மை நாணியே. 9

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினான்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே. 10

**திருச்சிற்றம்பலம்**